தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. } ரௌத்ரி ஞு மார்கழி மீ } பகுதி 9

தமிழ் இலக்கிய அபிவிருத்தி.

The Improvement of Tamil Literature.

ஸ்ரீமான் அ. மாதவையர் எழுதியது.

ஒரு பாஷையிலே, கடவுள் ஆன்மா மோக்ஷம் முதலியவற்றின் இயல்பை விளக்கும் சமய தத்துவ நூல்களையும்; இயற்கைப் பொருள்கள் மனிதனது உள்ளம் இவற்றின் தன்மை, கவனம் சிற்பம் சித்திரம் சங்கீதம் நிருத்தம் கைத்தொழில்கள் முதலியவற்றின் விதி விலக்குக்கள், ஆசார அநுஷ்டான நீதிகள், செல்வத்தைப் பெருக்கும் முறைகள், அரசியல், குடியியல்கள் ஆதியவற்றை எடுத்தோதும் நூல்களையும் இலக்கணங்களையும்; ஒரு நாட்டின் அல்லது சாதியாரின் வரலாற்றைத் தொடர்ந்து கூறும் சரித்திரங்களையும்; அகராதி நிகண்டு முதலிய கிரந்தங்களையும்; இன்னும் இவை போன்று, அறிவைப் பெருக்குவதையே கருதி இயற்றப்ப

டும் ஏனைய சிறப்பு நூல்களையும் ஒதுக்கி, மக்களின் வாழ்க்கைக்குரிய இன்பு துன்புகளையோ, அவரது மனோசலனங்களையோ, அவரிற் சிலர் சீவிய விருத்தாந்தங்களையோ, இயற்கைக் காட்சிகளையோ பொதுப்படையாகவும் குறிப்பாகவும் தாம் விளம்பும் விஷயங்களாகக் கொண்டியங்கும் பொது நூல் தொகுதியையே இலக்கியம் (Literature) என்பது மரபு. இத்தகைய இலக்கிய நூல்களுக்கும் ஏனைய நூல்களுக்கும் உள்ள முக்கிய பேதங்களை ஆராயின், அவை, இவ் விலக்கிய நூல்கள் (1) பிறவற்றைப்போல, அறிவைப்பெருக்குவதையே, அல்லது, விஷய தத்துவங்களை எடுத்துரைப்பதையே, முக்கிய நோக்கங்களாகக் கொள்ளாது, படிப்பவரது மனத்தை மகிழ்விப்பதை முதற்கருத்தாகவும், அஃதுடன் அவரது குணத்தைச் செம்மைப்படுத்துவதை உபகருத்தாகவும் கொண்டு செல்வதும்; (2) ஆக்கியோனது மனோபாவம் பிறவற்றினும் விட இவற்றில் மிக்கு விளங்குவதும்; (3) விஷய நூல்களைப் போன்று கூறிய கூற்றின் மெய்ம்மையை மட்டும் கருதாது, இவை, பொருள் நயத்துடன் சொல் நயத்தையும் மிகப்பாராட்டி நாடுவதுமே என்பது, புலப்படும். ஆயின், பொது நூல் சிறப்பு நூல் யாவுமே மனிதனது சித்த விருத்தியால்தானே உண்டாகலானும்; விஷயநூல்கள் சில, அரிய சொல் நயத்துடன் இயற்றப்படுதலானும்; சமய நூல்கள் சில, தத்துவ போதங்களுடன், பக்திரஸம் ததும்பி, வாக்கின்பு செறிந்து விளங்கலானும், சில நூல்கள் இரு பெரும் பகுதியினும் இயைவனவாம். உதாரணங்களாக, மநுஸ்மிருதி, சிவஞான சித்தியார், சித்தர் ஆரூடம், மருத்துவ நூல்கள், யோக நூல்கள், முதலியன சிறப்பு நூல்களாம்; அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், நளவெண்பா, ஆதியவை இலக்கிய நூல்களாம்; தேவாரம்,

திருவாய்மொழி, திருக்குறள், கலிங்கத்துப் பரணி போல்வன இரு பிரிவுகளுக்கும் பொதுவாம்.

இயல் இசை நாடகம் மூன்றும் இலக்கியத்துள் அடங்கும்; இவற்றின் இலக்கணங்களை வரையறுக்கும் நூல்கள் மட்டும் சிறப்பினத்தைச் சேரும். ஓவியம், சிற்பம் இவற்றிற் போலவே, இலக்கியத்திலும் ஸத்து அஸத்து என்னும் விஷயவரம்பில்லை. இயற்கையினின்றும் எள்ளளவும் விலகாது, உத்தம லக்ஷணங்கள் ஒளிர்தர, நிருவாண அவஸ்தையாக வரையப்பட்ட சித்திரமோ, செதுக்கப்பட்ட சிலை யுருவோ, ஆடையின்மை பற்றி இகழப்படாது, இயற்கையொடு பொருந்தும் ஏற்றத்துக்காக ஓவியராலும் சிற்பிகளாலும் பிற ரஸிகர்களாலும் எங்ஙனம் மெய்ச்சப்படுமோ, அங்ஙனமே, ஸதாசார அநுஷ்டானங்களுக்கு விரோதமாயினும் மானுட சுவபாவத்துக்குப் பொருந்த, சொல் பொருள் நயங்களுடன், ஒரு செயல், அல்லது அவஸ்தை, கத்தியத்திலோ கவியிலோ வருணிக்கப்படின், அவ் வருணிப்பையும் சிறந்த இலக்கியமாகப் புலவர் பெருமக்கள் போற்றுசிற்பர். உதாரணமாக, 'விறலிவிடு தூது' என்னும் நூல், வேசையர் கூத்தையும் வியபிசாரத்தையுமே வெகுவாய் விரித்துரைப்பதாயினும், சொல்லப்புகுந்த விஷயத்தில் வெளியிடும் வல்லமை பற்றி, அதுவும் ஓர் இலக்கிய நூலாக மதிக்கப்படும். இம்மட்டோ; சுவபாவாதீதமான சுவபாவ விரோதமான விஷயங்களிலும் கூட, அவ் வதிசயத்தையோ விபரீதத்தையோ அவ் வமயத்துக்குமட்டும் உண்மையாகக் கொண்டு நோக்குமிடத்து, கற்பனையும் சொல் வன்மையும் அப் போலியுண்மைக்குப் பொருந்தப் பொலி தருமாயின், இயற்கையொடு முரணிய அவ்வித வருணனையுமே இலக்கியமாக மதிக்கப்படும். உதாரணங்களாக, கம்பராமாயணத்தில் தசக்கிரீவனையும், கலிங்கத்துப் பரணி

யில் கூளிகளையும் காளிகோவிலையும் பற்றிய வருணனைகளை நோக்குக.

இனிய யாழும் குரலும் இயைந்தாற்போல, இடிமுழக்கும் மின்னலும் பெருமழையும் கூடினாற்போல, யாதானும் ஒருதுறையில் சொல்லும் பொருளும் ஒழுங்கு சிறந்து, மொழியுள்ளளவும் அழிவில்லை என்னும் பெருமையினவாய் விளங்கும் நூல்களே உத்தம இலக்கியமாம். இவை கவிரூபமாயும் கத்திய ரூபமாயும் இருக்கலாம். தமிழ்மொழியிலே, இத்தகைய அருமை பெருமை வாய்ந்த காவியங்கள் பலவுள. அராபியப் பாலைவனத்தில் விதிவலியால் உயிர் தாங்கிப் பல காதவழி நடந்தார்க்குச் சிலபொழுது நீரும் நிழலும் உதவும் அரிய சுனைகள்போல ஆங்காங்குக் காணும் இரண்டொரு செய்யுள்கள் தவிர மற்றைக்கவிகள் இலக்கியச் சிறப்பின்றி வறண்டபாழ்போல் பொரிதரும் நூற்றுக்கணக்கான தல புராணங்கள், அந்தாதிகள், ஆதிய போலி இலக்கிய நூல்களோ, மிகப்பலவுள. பண்டைக் காலத்திலே உத்தம காவியங்கள் பல வெளிப்போந்து, சுத்து கடல் போல் முத்திசையும் முழங்கிய இத்தமிழ்நாடு, இப்பொழுது, சந்தையொலி போன்ற கம்பலையை யன்றிச் செம்மொழிப் புத்திலக்கிய நறுமண மின்றி, தமிழ்த்தாய் ஈற்றுப் பிராயம் கடந்தாள் என்னும்படி, வறுமையுற்றுக் குழம்பிக்காணுதற்குப் பலகாரணங்களுள. அக்காலத்திலே, தமிழ் நாட்டரசர், தமிழ்ப் புலவர்களைத் தம்முடன் சரியாதனத்து வைத்தும், அவர்க்குப் பல்லக்குத் தாங்கியும், அடைப்பத் தொழில் செய்தும், மதிப்பரிய பரிசில்கள் வழங்கியும் ஆதரித்து வந்தனர். 'குழந்தையும் தெய்வமும், கொண்டாடும் இடத்திலே' என்னும் முதுமொழி, பிறர் உதவியின்றி உயிர் வாழமாட்டாமையால் குழந்தைகளையும், மனோசிருஷ்டி சக்தியால் தெய்வத்தையும்

ஒக்கும் கவிஞர்களுக்கும் பொருந்தும். தவிர, எல்லாப் பாஷைகளிலும், ஆதிகவிகள், பிற்பட்டாரினும் சிற்சில விஷயங்களில் சிறந்து விளங்குவதைக்காணலாம். வான்மீகி, சங்கப் புலவர், ஹோமர், வெர்ஜில், சாஸர் முதலிய கவிசிரேஷ்டர்கள் தமது மூளைவன்மையினால் மட்டுமென்றி, கருத்துக்களஞ்சியக் கொள்ளையிலே காலக்கிரமத்தில் தாம் முற்பட்ட காரணத்தினாலும் ஒப்புயர்வற்று ஒளிதருகின்றனர். உலகுடன் இசைந்து கலைமகளுமே தன்மக்களில் மூத்தோர்க்குச் சிரேஷ்டாம்சம் அளிக்கின்றாள் போலும். கவிக்கருடனான கம்பனும் கூடச் சீவகசிந்தாமணியினின்றும் சிலகருத்துக்களை எடுத்துப், புதுக்கியும், செதுக்கியும், துலக்கியும், பெருக்கியும், தன் காவியத்தில் கையாண்டிருக்கின்றான் எனின், பிற கவிக்குருவிகள் ஆலாவைப் போற் பறந்துழலுவது வியப்பன்று. பண்டைத் தமிழ்க் காவியங்களின் மேன்மைக்கு இவ்விரு முகாந்தரங்களை யன்றி, மற்றொன்றுளது: சங்கப்புலவர்கள், அகவல் பாவிலும், எதுகை மோனைகளை அதிகம் பாராட்டாத கவிகளிலுமே தமது நூல்களைப் பெரும்பாலும் இயற்றினர். கட்டிளங்காளை ஒன்று கால் வீசிச் சுயேச்சையாய்க் குதித்துலாவும் கதிக்கும், கிழ எருது ஒன்று,தன் பருவத்துக்குரிய தளர்ச்சித் தாழ்வுகள் போதாமே, காலில் தளைகளும் கழுத்தில் கட்டையும் கட்டுண்டு தத்தளிக்கும் கதிக்கும் வித்தியாசம் உண்டன்றோ? கற்பனைப்பண்டாரச் சூறையில்பிற்பட்ட சாதாரணக் கவிஞர், தமது மனோபாவக் குறையைச் சொல்முழக்கால் மறைக்கத் தலைப்பட்டு, எதுகை மோனைகளையே இருபுறச்சிறகராயேற்று, சிலேடை யமகம் சிரோஷ்டகம் ஏகபாதம் திரிபு மடக்கு சித்திரகவி ஆதிய கரணங்களைப் போட்டுக்கொண்டு, கவனவானத்தில் உன்னி உன்னிப்பறக்க முயலும் காட்சி, வியப்பினும் பரிதாபத்தையே விளைக்கின்றது. இவ்வாறாகக்,

காலஞ் செல்லச் செல்லத், தமிழ்க்காவியங்கள், இலக்கியச் சிறப்புக்களும் அழகுகளும் எளியநடையும் வலிய கருத்தும் குன்றித் தலைகீழாக இலக்கணத்துக்கு இயைய ஒழுகலாகி, சொல் ஆடம்பரங்களும் படாடோபங்களும் வாக்குஜாலங்களுமே மலிந்து வெளிவரலாயின. உண்மையில் கவிவன்மைவாய்ந்த உத்தமப்புலவர் இடையிடையே இயற்றியருளிய சிற்சில காவிய மணிகளுங்கூட, காலவேற்றுமையால் இத்தகைய மாசு மறுக்களின்றி அமைந்தில. நம் காலத்திலோ, மற்றெல்லா விஷயங்களையும்போலவே, தமிழ் இலக்கியமும், ஒரே குழப்பமாயிருக்கின்றது. இக்குழப்பத்தை நீக்கித், தொல்புகழ் படைத்த அவ்விலக்கியத்துக்குப் புது வலியூட்டி, எங்ஙனம் அதை முன்னினும் மேம்படுத்திச் சிறந்து விளங்கச் செய்யலாமென்று சிறிது ஆராய்வோம்.

முதலில்கவிநடையையும் காவிய விஷயத்தையும் கவனிப்போம்: எல்லாப் பாஷைகளிலுமே பேச்சு நடைக்கும் கவி நடைக்கும் பேதமுண்டு. இதனால், கும்மி நொண்டி தெம்மாங்குகளைப்போன்ற நாடோடிப் பாட்டுகளைத் தவிர, 'கவி' என்னும் பெயர்ச்சிறப்புக் குரியனவாய் இயற்றப்படும் பாடல்கள், பாஷாஞானமில்லாப் பாமரர்க்கு எளிதில் பொருள் தெரிவதில்லை. ஆயின் நடை அழகும் கருத்துமேன்மையும் குன்றாது, தடையின்றி யார்க்கும் பொருள் விளங்கும் தன்மையதாயுள்ள இனிய ஆழ்ந்த தெள்ளிய காவியமே, மிகப்பலர்க்குப் பயன்படுமாதலால், பாமரரும் பாவலரும் பாராட்டுதற்குரியது என்பது, வெள்ளிடைமலை போல விளங்காநிற்கும். பண்டைத் தமிழ்க்காவியங்கள் பல இவ்வண்ணமே இயற்றப்பட்டன. இப்போழ்து நமக்கு அவை எளிதில் பொருள் விளங்காமைக்குக் காரணம் காலக்கிரமத்தில் பலசொற்களும் பிரயோகங்களும் வழக்கற்றுப் போயினமையும், வேறு சில

முகாந்தரங்களால் நம்மவர்க்குத் தமிழ்மொழிப் பயிற்சி முன்னிலும் குன்றியிருக்கின்றமையுமே அன்றி, ஆக்கியோரது வாக்குக்கடினம் அன்று. பிற்காலத்துநூல்களோ, வர வர, திராக்ஷாபாகம், கதலீபாகம், நாளிகேரபாகம் யாவும் ஒழிந்து, இருப்புக்கடலைகள் ஆய்விட்டன. தமிழிலே ஒரு பொருளையே குறிக்கும் பல சொற்கள் மிகவுள. எதுகை மோனைகளின் பொருட்டும், தமது புலமைத்திறனைக் காட்டும்பொருட்டும், பிற்பட்டகவிகள் அபூர்வபதங்களையும் இலக்கணமுடிச்சுக்களையும் அபரிமிதமாய்க் கையாளலாயினர். கவி நடையாகுக உரை நடையாகுக,ஒருவன் பொது இலக்கிய நூலொன்றை எழுதும் பொழுது, கூடிய அளவு தமிழ் மக்கள் எல்லார்க்கும் பொருள் விளங்கும்படி எழுதுவதைத் தன்முதற்கடமையாக மதித்து எழுதவேண்டும். சந்திதொடரும் தமிழ் மொழியில், சிலேடை மடக்கு முதலிய பத ஜாலங்கள் எளிதில் அமையும். இவை லளிதமாய் அமையுமிடத்து மிக்க இன்பத்தைத் தருமென்பதில் ஐயமில்லை. உதாரணமாக, அழகர்கலம்பகத்தை நோக்குக, ஆயின், இத்தகைய சொற்புரட்டுக்களையே காவியத்தின் முக்கியாம்சமாகக் கொள்வது, கூத்தில் கோமாளியையே சிரேஷ்ட பாத்திரமாகக் கொள்ளுதல் போலாகும். எதுகைமோனை விலங்குகள், சாதாரண கவிஞர்களையேயன்றி, ஒப்புயர்வற்ற திப்பியப்புலவர்களையும் கூட இடர்ப்படுத்தி, அவரது கருத்துக்களையே காவியமுறைக்குரிய ராஜபாதையினின்று விலகியோடச்செய்திருக்கின்றமை, தமிழ்ப் பெருங்காவியங்களில் ஆராய்ச்சியுடையார் யாவரும் அறிவர். ஒரு சிறு உதாரணமாக :—

"போவாய், வருவாய், புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குவாய்—தீவாய்
அரவகற்றும் என்போல, ஆர்கலியே! மாதை
இரவகற்றி வந்தாய் கொல் இன்று?"

என்னும் அழகிய வெண்பாவிலே, புகழேந்தியே, நேர் வழியை விட்டு விலகி யிருப்பதைக் காண்க. எதுகை நோக்கி அன்றி, நளன் தீயினின்றும் பாம்பை விடுத்த செய்தியை இவ்விடத்தில் குறித்தற்கு யாது பொருத்தம், அவசியம் உளது? சமயோசிதமல்லாத அக்கருத்து, படிப்பவனது கவனத்தை முக்கியக் கருத்தினின்றும் விலக்கிச் சிதறச் செய்து கவியின் தீவிரத்தைக் குறைக்கின்றமை ஊன்றி நோக்கிற் புலப்படும்.

தமிழ்க்கவிகள், எதுகை மோனை சிலேடைகளுக்காக அபூர்வ பதங்களை உபயோகிப்பதுமன்றி, அன்மொழித்தொகை ஆகு பெயர் ஆதிய சொல்விகற்பங்களையும் அபரிமிதமாய், ரஸாபாஸமாய் சமயோசிதமன்றிக் கையாளுகின்றனர். உதாரணமாக, பெண்பாலைக்குறிக்க இனியசொற்கள்பல தமிழ்மொழியிலிருப்பவை போதாமே, தொடிகொடி, தாள்தோள், கூந்தல் காந்தள், கோதை தோகை, பொன்மலை, மான்மயில் என்று அநுவசியமாய்ப் பெண்பாலைச் சுட்டுவது, அழகன்று; சில அமயங்களில், திட்டுவதையே ஒக்கின்றது. இவற்றில் மிகச் சில பதங்கள்மட்டும், அருமையான சில சந்தர்ப்பங்களில்—உதாரணமாக, தலைவன் தலைவியின் அழகைத் தனிமையில் புனைந்துரைக்கும் பொழுது*—இயற்கை விரோதமின்றிப் பொருந்தும். இஃது எல்லாப்பாஷைகளுக்கும் ஒக்கும். தமிழ்க் கவிஞர்கள், எளிதில் பொருள்விளங்காதபடி அபூர்வபதங்களையும் இலக்கணப் பிரயோகங்களையும் சொற்புரட்டுகளையும் வேண்டுமென்றே கையாளுவது எவ்வளவுக்கு மிஞ்சி விட்டது என்பது "பொருள் சொல்லி புலமையில்லை" என்னும் அபிப்பிராயத்தினால் விளங்கும். 'வினைதடிக்கம்பதிகம்' என்பதிற் சந்திசேர்ப்பதினால் பொருள் மயக்கம் உண்டாகும் இடங்க

---

* சிலப்பதிகாரத்திலே கோவலன் கண்ணகியின் நயத்தைப் பாராட்டும் பாக்களைப் பார்க்க.

ளில், கவியின் ஓசைக்குக் குறையின்றிச் சந்திகளைப் பிரித்துத் தனிசீர்களை அமைத்தல், பொருள் நிச்சயத்திற்கு அநுகூலமாகும். ஒரே தொடர்பாகச் சந்திகளை விடாது தொடுப்பது அவசியமின்று. இவையன்றி, அதிசய வணிகளும், இல்பொருள் உவமைகளும், இயற்கைக்கு விரோதமான வருணனைகளும், மனமகிழ்ச்சியினும் அவநம்பிக்கையையும் அருவருப்பையுமே தரும் பொல்லாப் புனையுரைகளும் கற்பனைகளும், அடர்ந்து வளர்ந்தோங்கி விட்டமையால், வாழ்க்கைத் துன்புகள் உள்ளத்தை உறுத்துபொழுதுகளிலும் மற்று அவகாசம் அமைந்த அமயங்களிலும் மனிதனது மனத்தைத் தன்பால் வசீகரித்துத் தேற்றி மகிழ்விக்கும் அழகிய பூஞ்சோலையாக விளங்கவேண்டிய தமிழ்க் காவிய இலக்கியம், இருண்டு முட்செறிந்து உள்நுழைவதே சிரமசாத்தியமாய் அச்சத்தை விளைக்கும் அடவிபோல் ஆகிவிட்டது. கனவிலுமே கவி கருதியிராத கருத்துக்களையெல்லாம் அவன் ஆழப்பொதிந்து வைத்திருப்பனவாக வலிந்துகொண்டு, பதங்களைச் சித்திரவதை செய்து துன்புறுத்தி, மனம்போன போக்கெல்லாம் வியாக்கியானஞ் செய்வதே புலமையாகிவிட்டது. பல்லாண்டுகளுக்கு முன்னர் ஒருநாள், கம்பராமாயணப் பிரசங்கி ஒருவர் செய்த பிரசங்கத்தைக் கேட்டுக் களிக்கச் சென்றபொழுது, சீதை அநுமானைப் புகழ்ந்து கூறும் " ஆழி நெடுங்கை ஆண்டகை" என்று வரும் விருத்தத்தை தமது பிரசங்க விஷயமாக்கி, "பாழி நெடுந்தோள் வீரா!" என்னும் சம்போதனத்துக்கு முதலில் வியாக்கியானஞ் செய்யத் தொடங்கிய அவர், கம்பன் ஏன் "கை வீரா" "கால் வீரா" "தலை வீரா" என்னாது "தோள் வீரா" என்றான் என்றும், இன்னும் அவ்வண்ணமே பல வழிகளிலும் விசாரிக்கப் புகுந்து, இரண்டு மணிக் கூறுவரை சம்போதனத்தைக் குவித்தே பொழிந்த பிர

சங்க மாரியினால் பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்ற ஆவல் தீ முற்றும் அவிந்து சாம்பராகி, உடம்பும் நடுக்குற்று, யாம் வீட்டுக்குத் திரும்பியது, இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது. அந்தப் பிரசங்கி சென்ற கதியில், இவ்வளவில் அப்பிரசங்கம் முடிந்திருக்குமென்று உறுதிசொல்லவொண்ணாது.

இதுகாறும் கூறியவற்றால், இக்காலத்துத் தமிழ்க் கவிஞர், அபூர்வ பதங்கள் அஸந்தர்ப்பமான அன்மொழித் தொகை ஆகுபெயர் ஆதிய சொல் விகற்பங்கள், அதிகப்பட்ட எதுகை மோனைகள், சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலிய பத ஜாலங்கள், கடினமான இலக்கணப் பிரயோகங்கள், பொருளை மயக்கும் சந்திகள், சிறப்பில்லாத அதிசய அணிகள், விபரீதமான இல் பொருள் உவமைகள், இயற்கை விரோதமான இன்பந்தராத வருணனைகள் கற்பனைகள் முதலியவற்றைக் கைசோரவிட்டு, தேர்ந்த கருத்தையும் தீர்ந்த சொல்லையுமே நன்கு மதித்துக் கைப்பிடித்து, "பொருள் மறைந்தால் புலமையில்லை" என்னும் நன்மொழி நிலவுறும்படி, தெள்ளிய இனிய தூய அழகிய நடையில் எழுதுவதே உத்தமம் என்பது விளங்கும். ஆன்ற சிறந்த கருத்துக்கள் அமையாத கவிகளின் சொல்நயம், பேடிகை வாளையும் பிணம் போர்த்த பீதாம்பரத்தையும் நன்மணமில்லாப் பொன்மலரையுமே போலுமன்றோ? ஆன்றோர் வழக்காயினும், பாட்டை நிரப்பவேண்டி அர்த்தமில்லாத அசைமொழிகளை உபயோகித்தலும், பேச்சு வழக்கில் வேறு பொருள்பட்டு, விபரீத அர்த்தத்தைத் தரும் சொற்றொடர்களையும் [உதாரணமாக, திரௌபதியை "இராசசூய பன்னி" எனல்] உபயோகித்தலும் விலக்கற்பாலன.

இனி, மேல்நாட்டார் பழக்கத்தால் அறிந்துள்ள பிறமொழி இலக்கியங்களினின்றும் எந்நயங்களை நம் மொழிக்கு

ஏற்றவாறு நாம் மாற்றிக் கொள்ளலாகும் என்பதைக் கவனிப்போம். நடை, உடை பாவனைகளிலும், மற்ற நாகரீகத் துறைகளிலும், பிறநாட்டார் சாதியாருக்குள் உத்தமமாய் விளங்குவனவற்றை நமக்கேற்றவாறு மாற்றி ஏற்றுக்கொள்ளுதல் போல, அவரது இலக்கிய நயங்களையும் நூதன முறைகளையும் நாம் ஆராய்ந்து, பொருந்துமிடத்துக் கையாண்டு, நம் மொழியை விருத்திசெய்வது, தமிழ்வாணர் கடமையாகும். அங்ஙனஞ் செய்தல் ஆன்றோர் வழக்கன்று, தொல்காப்பிய முறையன்று, என்பாராயின், அஃது, வீட்டினின்றும் கட்டுச்சோற்றுடன் புறப்பட்ட பிரயாணி ஒருவன், யார்க்கும் பொதுவாய் இலவசமாய் வழிநெடுகக் கிடைக்கும் புதிய நறிய பதச்சூடான அறுசுவைப் பண்டங்கள் அனைத்தையும் வெறுத்துத்தள்ளி, நாளுக்குநாள் பழையதாகி ஊசிக்கொண்டு வரும் தன் கட்டுச்சோற்றையே தின்று, உடல்மெலிந்து நோயுற்று, வழிநடந்த வருத்தமன்றித் தன் பிரயாணத்தால் மற்றெவ்வித நயமோ இன்பமோ எதுவும் பெறுதொழியும் மௌட்டியத்தையே ஒப்பதுமன்றி, வடமொழி இலக்கியங்களினின்றும் பலவற்றை ஏற்றுள்ள நம்மொழிக்குப் பொருந்தாது.

மேலையர்க்குள் இக்காலத்தில் இயற்றப்படும் காவியங்கள் மிகத் தூயனவாய் இலங்குகின்றன. மக்களது அவயவங்களில் சிலவற்றை மறைபொருள்களாகவும், செயல்கள் சிலவற்றை வெளிப்படையாக விளம்பொணுதனவாயும் பாவித்தல், கேவலம், நாகரீக ஸங்கேதமே எனினும், ஆடவர் மாதர் இளையோர் மூத்தோர் அனைவரும் படித்தற்குரிய பொது இலக்கியங்களை எழுதுவோர், அவ்வரம்பை மதித்தொழுகுவது அவசியம். இவ்வரம்பு, இலக்கியத்தில் 'ஸத்து' 'அஸத்து' என்பதில்லை என்று முன்கூறியதுடன் முரணுவதன்று.

மாறுபட்ட உருவத்தை உள்ளவண்ணம் வரைந்து காட்டும் ஓவிய த்தில் மட்டும் உடையின்மை ஒரு குறையாகப் பாராட்டப்ப டாதேயன்றி, ஜனசமூகத்தில் ஸ்திரீ புருஷர் கூட்டுறவு வாழ் க்கையைப் பிரதிபலிக்கும் ஒரு சித்திரத்தில் சிலரை ஆடை யின்றிக் காட்டுவது இகழப்படுதல்போல, அதையே தன் விஷயமாக எடுத்துக்கொள்ளாத பொது இலக்கிய நூலில், ஸங்கேத விரோதமான விஷயம் கூறப்படின், அஃது, அவ்வி டத்திற்குப் பொருந்தாததாகக் கண்டிக்கப்படுமேயன்றி மற்றில்லை. தந்தையும் மகளும், தாயும் மகனும், அண்ணனும் தங்கையும் சேர்ந்து படித்து அநுபவிக்கத்தகாத பாடல்கள், நமது தமிழ்க்காவியங்கள் பலவற்றுள்ளும் ஆங்காங்குக் காணப்படுதல் விசனிக்கத்தக்கதே. இக்குறையே நீக்குதல் நம் காலத்துக் கவிஞர் கடனாகும். இந்திரனது 'அடாச் செயலையே காவிய விஷயமாகக் கொண்டு, எனது நண்பர் ஸ்ரீமான் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் இயற்றி யுள்ள ''அகலிகை வெண்பா''வில், இத்தகைய ஆபாசங்கள் யாதுமே இல்லாமை, மெய்ச்சிப் பிறரால் பின்பற்றத்தக்கது.

மடல் கோவை உலா முதலிய நூல்களில், கடவுளையே தலைவனாக்கி, நாயகிநாயக பாவமாயும், வேறு சிற்றின்ப வழி யாயும் மிகக் கொச்சையாகப் பாடுதல், இக்காலத்து நாகரீகக் கொள்கைகளுடன் முரணுவதால், இம்மரபும் விடுக்கற்பாலது.

தமிழ்மொழியில் பாவினங்கள் ஏராளமாயுள. சிலப்பதிகா ரம், தேவாரம் திருவாசகம் முதலிய பழைய நூல்களில் உள்ள னவும், இப்பொழுது பொதுவாய் வழக்கற்றுப் போயினவுமான சில அழகிய பாவினங்களையும், கலம்பகங்களில் வரும் தாழி சைகளையும் அதிகம் பயின்று கையாளுவதன்றி, மேலையரிடமி ருந்து நாம் புதிதாய்க் கொள்ளுதற்குரிய பாவினங்கள் இல் லையென்றே சொல்லலாம். அவர்க்குள் வழங்கும் முடிவெது

கைகூட நமக்கு முற்றும் புதிதாகாது; அற்றம் நோக்கி, அவ் வழக்கையும் இப்பொழுதினும் அதிகம் கையாளலாம். மேலே யர்க்குள் "ஸானெட்" என்னும் பதினாலடிப்பா ஒன்று வழங்கு கின்றது. ஒவ்வொரு ஸானெட்டும் தனித்துத் தன்னுள் முடிவு பெறுதலுடன், ஒரு பாட்டில் ஒரே முக்கிய கருத்தை விவரிப்பதே அதன் சிறப்பு. அவர்க்குள் 'லிரிக்' என்று வழங் கும் (பொதுவாய்) சிங்காரரஸப் பாடல்கள் இவ்வண்ணமே, ஒரு செய்யுள், அல்லது சில செய்யுள்களில், முக்கிய கருத்து, அல்லது சம்பவம், ஒன்றைச் சொல்லின்பத்துடன் கூறுகின் றன. நமது கோவைகளில், ஒவ்வொரு துறையையும் ஒவ் வொரு 'லிரிக்' என்னலாம். சத்திமுற்றப் புலவர் தமது மனைவியை நினைந்து கூறிய "நாரை விடு தூது" 'லிரிக், வர்க்கத் துக்குச் சிறந்த உதாரணமாகும். நமக்குள் வழங்கும் தனி ப்பாடல்கள் பல இவ்வினத்தைச் சேர்ந்தனவே. பதினான்க டியோ குறைந்த அடிகளோ கொண்ட அகவல்களையும், இதர பாவினங்களையும், ஏற்றவாறு எதுகை மோனைகள் அமைத்து, இவ்விதப் பாடல்களுக்குக் கையாளுதல் இயையும். ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுள்கள் வரும்பொழுது, அவையாவும் ஒரே முறையில் வருதல் மரபு. தமிழ்க் காவிய இலக்கியத்தில் மேலையர் காவியங்களினும் அதிகமான பாவினங்கள் உளவெனி னும், காவிய விஷயாம்சத்தில் மேனாட்டுக் காவியங்கள் நம்மதினும் சிறந்து பெருகி விளங்குகின்றன. பொதுவாய், அந்நாட்டுக் காவியங்களில் "இல்லாதன இல்லை" என்னலாம்; மனிதனது மனது அநுபவிக்கவல்ல எல்லாவித ரஸங்களும் அவற்றில் நிறைந்து ததும்புகின்றன. நமக்குள்ளும் நாளா வர்த்தியில் இப் பெருமையும் விசாலமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. இப்பொழுதே சிறிதுகாலமாக, கவிநடையின்றி, ஓசையினால் மட்டும் உண்டாகும் ஒருவிதச் சொல் இன்பமும்

நயமும் ஒழுங்கும் விரவிய 'வசன கவி' எனத்தகும் காவியங்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துகொண்டிருக்கின்றன. கடல்மடை திறந்தாற்போலத்தங்குதடையின்றிக் கவிஞரின் தீவிரமான ஆன்ற கருத்துக்களை வெளியிட, இவ்வித உரைப்பா நடை சால இடந்தருமென்பது கூறுமே விளங்கும். இதுகாறும் வெருவாய்க் கவிநடையிலேயே நாடகங்கள் இயற்றிவந்ததை விட்டு, இப்பொழுது, இயற்கைக்குப் பொருந்த, உரைநடையில் நாடகங்களை எழுத மேலையர் தலைப்பட்டிருக்கின்றனர். இதுவும் நாம் கவனித்துக் கைப்பற்றுவதற்குரியது.

இனி, உரைநடை இலக்கியத்தை ஆராயப் புகின், நமக்கும் மேலைபர்க்குமுள்ள பேதம் அஜகஜாந்தரம் என்னலாம். பேராசிரியர் பரிமேலழகர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களின் வியாக்கியானங்களையும், பெருந்தேவனார் பாரதத்தில் இடையிடையே வரும் சில வாசகங்களையும் தவிர, தமிழ்மொழியில் வசன நடைக்கு வேறு பழைய முன்மாதிரிகள் இல. பொது இலக்கிய நூல்களையேயன்றி, இலக்கணங்களும் அறிவுநூல்களும் கூடக் கவிநடையில் எழுதப்பட்டுவந்தன. இதனால், உரைநடை இலக்கிய விஷயத்தில் 'ஆன்றோர்' வழக்கு என்னும் நிர்ப்பந்தம் இல்லை. தொல்லாசிரியர் உரைநடையோ பொதுஇலக்கிய நூல்களுக்கும் இக்காலத்துக்கும் பொருந்தாது. சற்றேறக்குறைய நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னிருந்த புதுவை ஆனந்தரங்கபிள்ளை என்ற பிரபு, தமது தினசரி வர்த்தமானங்களைத் தமிழில் எழுதிவைத்திருக்கிறார். தமிழ்ப்புலவர் பெருமக்கள் பலரை ஆதரித்த வள்ளலாகிய அவருடைய தமிழ்வசன நடையை நோக்கின், இக்காலத்துப் பள்ளிச்சிறுவனது தமிழே மேலாகத் தோற்றும். தமிழ்மொழிக்கு வசனநடை அவ்வளவு புதிது

மேலையரின் இலக்கியப் பழக்கம் உண்டான பிறகுதான் தமிழில்உரைநடை நூல்கள்வெளிவரத் தலைப்பட்டன. இதுகாறும் வெளிப்போந்துள்ள நூல்களில் இலக்கியச் சிறப்பு மிக்கு விளங்குவன முயற்கொம்பே. நடையே முற்றும் புதிதாக, இது வியப்பன்று. ஒரு காட்டை அழித்துத் திருத்திப் பயிரிடுவதினும் மரஞ் செடியில்லா வெறும்புலத்தை உழுது பயிரிடுதல் எளிது; ஆயின், அழித்துத்திருத்திய கொழுத்த காட்டுப் புலத்தினும், வெறும்புலம், எருச்சேர்ந்து கொழுக்கும்வரை, குறைந்த பலனையே கொடுக்கும். நாகரீகம் குறைந்த காலத்து முன்னோர் கட்டிய வீட்டைப் பிற்கால நாகரீகத் தேவைகளுக் கேற்றபடி மாற்றிப் புதுக்கி அமைப்பதினும், வேண்டியவாறு புதியதோர் மாளிகையைக் கட்டிக்கொள்ளுதல் எளிது. ' தமிழில், உரைநடை இலக்கியமாகும் மாளிகையைக் கட்டுறும் காலம் இது. என்ன என்ன சௌகரியங்களை அமைத்துக்கொள்ளவேண்டும், எவ்வாறு அம் மாளிகை இருக்கவேண்டுமென்று, தமிழ்மக்கள் நன்கு யோசித்து நிருணயிக்கக்கடவர். எளிதில் எவர்க்கும் ஐயந்திரிபறப்பொருள் விளங்குவது கவிநடையினும் கத்தியநடையில் இன்றியமையாத ஒன்று. நாடகம் கதைமுதலிய இலக்கிய நூல்களில், பாத்திரத்தின் சுபாவத்திற்கேற்ப, நாடோடியான கொச்சைமொழிகளைச் சில சமயங்களில் உபயோகிக்கினும், மற்ற இடங்களெல்லாம் இலக்கண வழுவின்றி யிருப்பது மற்றொன்று. ஆயின், கல்லார் கற்றார் எல்லாரும் படித்தற்குரிய கத்திய நடை நூல்களில், அருமையான இலக்கணப் பிரயோகங்களையும், அபூர்வ பதங்களையும், பேச்சு வழக்குடன் சிறிதும் ஒவ்வாத சொற்றொடர்களையும் தக்க காரணமின்றி உபயோகித்தல், எழுதுவோனது புலமையையும் வித்யாகர்வத்தையும் காட்டுமேயன்றி, வேறு பயன்படாது. உதாரணங்களாக,

ஒரு சாதாரணக் கதையின் நடுவே, "நான் வீட்டைவிட்டு வரும்பொழுது" என்னாது, "யான் இல்லை நீங்குபு வருழி" என்றேனும்; "ஏன் இங்குவந்தாய்?" என்னாது "எற்றுக்கீண்டுற்றனை?" என்றேனும், "என் அருமாந்த பிள்ளை" என்னாது "என் அருமருந்தன்னசேய்" என்றேனும் எழுதுதல் பொருந்தாது. அன்றியும், உரைநடையில் வேற்றுமை விகுதிகளை விரித்தெழுதுவது தெளிபொருளை எளிதில் பயந்து, விபரீத அர்த்தங்களையும் சமுசயங்களையும் விலக்கும்.

தமிழ்மொழியிலே வடமொழிச் சொற்கள் மிகப்பலவுள. இருமொழிகளும் பாலும் தேனும்போல் கலந்துவிட்டன என்பது பொருந்தும். இரண்டையும் கரைகண்ட மேதையருமே, இது தமிழ் இஃது ஆரியம் என உறுதிசொல்ல ஒண்ணாத பதங்களும் உள. இது பிற்காலத்து நிகழ்ந்தது மன்று; சங்க நூலான திருக்குறளின் முதற்குறளில் தானே சமபாகமாய் இருமொழிச் சொற்களும் விரவியிருப்பதை நோக்குக. உண்மை இங்ஙனமாக, தனித் தமிழ்ச் சொல்லன்றிப் பிறவற்றைக் கையாளேம் என்று வீண் வருத்தமுற்று, நடையழகு குன்றி, இடர்ப்படுவது மதியாகாது.. சாதிமத பேதமின்றி, ஒரே கடவுளின் மக்களாக, உலகோர் அனைவரும் ஒருப்பட்டு வாழ வேண்டுமென்னும் பேரெண்ணம் நாளுக்கு நாள் பரவிவரும் இந்நாளிலே, இத்தகைய பாஷாத்வேஷம், இகழ்ச்சிக்கே இடந்தரும். தாய்மொழியின் மீது அபிமானத்தைக் காட்டுவதுமாகாது. வடமொழிப் பதங்களைமட்டுமன்றி வேறு திசைச் சொற்களையும் தமிழ்த்தாய் ஏற்றிருப்பதையும்; 'தக்கதே தங்கும்' என்னும் நியாயப்படி, தகாத மொழிகள் நிலைபெறா என்பதையும் இன்னோர் கருத்தக்கடவர்.

'தமிழ்மொழி பிறமொழிகளைப்போலப் பிறந்து வளர்ந்து வருவது ஒன்றன்று, சிவபெருமானால் முழுமுதலாக உண்டாக்

கப்பட்டது' என்பார் ஒருபுறம். இற்க; நமது நாட்டுக்குப் புதிதாய்க் கிடைத்துள்ள மேலையரது பழக்கத்தால் தெரியவரும் பொருள்களையும் கருத்துக்களையும் எங்ஙனம் தமிழில் கூறுவது என்னும் வினாவுக்குப் பல விடைகள் பிறந்தன. தனித் தமிழ்ச்சொற்களைக் கொண்டே அவற்றைக் குறிக்கவல்ல புதிய சொற்றொடர்களை அமைக்கவேண்டும் என்பார் சிலர்; இங்ஙனம் செய்வதில், தமிழுடன் ஆரியத்தையும் கையாளலாம் என்பர் வேறு சிலர்; இவ்வாறு இடர்ப்படுவதினும், அக் கருத்துக்களையும் பொருள்களையும் அவ்வப் பாஷைகளில் குறிக்கும் சொற்களையே தமிழில் பெயர்த்தமைத்துக் கொள்வதே சரி என்பர் வேறு சிலர். நூதன சிருஷ்டி, பாஷைகளில் மிக்க பயிற்சியுள்ள பண்டிதர்க்கன்றி மற்றவர்க்குச் சுலபமன்று என்பதும்; பண்டிதர்க்குங்கூட, நம் பாஷைக்கு அநுசரணையாயிருந்தாலன்றி முற்றும் புதிய ஒன்றுக்கும் பெயர்படைத்தல் பொருந்தாது என்பதும்; இப்பொழுது மேனாட்டார் பழக்கத்தால் புதிய கருத்துக்களையும் பொருளறிவையும் பெற்றுவரும் தமிழ் மக்கள் பெரும்பாலருக்கும் தமது தாய்மொழியில் போதிய பயிற்சியில்லை என்பதும், இக்குறையால் நூதன சிருஷ்டி வெகுவாய் அசாத்தியமே என்பதும்; பண்டிதர் பிணைத்த புதுச் சொற்றொடர்களும் கூட, அவற்றைக் கையாள்வார் அனைவர்க்கும் ஒரே பொருள் தாராமையால், விபரீதங்கள் விளையலாகும் என்பதும் மறுக்கற்பாலனவல்ல. அவ்வாறின்றி, ஒரேவழி, நூதனமாய்த் தோன்றும் எல்லாக் கருத்துக்கள் பொருள்களுக்கு முரிய பிறமொழிச் சொற்களையே தமிழ்மொழிக்குள் இறக்குமதி செய்து பாஷையைக் குழப்பி, அதன் இன்னொழுக்கைக் கெடுத்துவிடுமென்பதும் மறுக்கற்பாலதன்று. இந்நூதனப் பொருள்கள் கருத்துக்கள் பெரும்பாலும் சாஸ்திர சம்பந்

தமானவைகள், மிகச் சிறு பான்மையே பொது இலக்கியத்தைச் சேர்ந்தவை எனினும், இருவழிகளிலும் ஒரே விதியை அநுஷ்டிப்பதே தகுதி. இவ்விஷயத்தில் ஆங்கிலரது அநுபவம் நமக்கும் பயன்படும். அவர், எக்கருத்தாயினும் எப்பொருளாயினும் பிறநாட்டிலிருந்து கிடைக்கும்பொழுது, அந்நாட்டு மொழியில் அவற்றுக்குள்ள பதங்களைத் தங்குதடையின்றி ஏற்கின்றனர்; இஃதன்றி, மேதையர் சிலர், புதிய சொற்களைப் பிணைத்துக் கையாளுகின்றனர். அப்புதிய கருத்துக்கள் பழகப் பழக, இவற்றுள் ஏற்ற பதங்களே பாஷையில் தங்கி, ஏனைய வழக்கற்றுப் போகின்றன. இவ்வழி நமக்கும் பொருந்தும்; நாமும், நமது தாய்மொழியின் தூய்மையை நினைந்து புதிய சொற்றொடர்களையே கூடியவரை அமைத்துக்கொள்வோம்; பிறமொழிச் சொற்களையும், தமிழ்ப் போக்குக்கியைய அமைத்துக் கூசாது கையாள்வோம்; இதனால் இழிவில்லை; நம்மொழிக்குக் கேடுறாது; தக்கதே தங்கும் என்பது திண்ணம்.

மேனாட்டாரது உரைநடை இலக்கியத்தினின்றும் நாம் கொள்ளத்தக்கன எவை என்பதை இனி ஆராய்வோம். அந்நாட்டுப் பாஷைகளில் (1) நாவல் (Novel) அல்லது கட்டுக்கதை (2)வியாசம்(Essay) (3)சரித்திரம்(History)(4)நாடகம் (Drama) (5) சிவிய சரிதை (Biography and Auto-biography) (6) லிகிதம், தினசரி வர்த்தமானங்கள் (Letters and Diaries) (7) இலக்கிய மதிப்பு (Literary criticism என எழுவகை நூல்கள் இலக்கியச் சிறப்புடன், மிகுந்து விளங்குகின்றன. இவற்றுள் சில, முக்கியமாய் முதல் மூன்று வகுப்புகள், எடுத்துக்கூறும் விஷய பேதங்களிலும், விஷயத்தைக் கையாளும் விதத்திலும் பலகவர்பட்டுக் காண்கின்றன. இதுகாறும் தமிழ்மொழியுள் புகுந்துள்ளவை இம்மூன்று பகுதிகளின் சிலகவர்கள் மட்டுமே. இங்ஙனம் தோன்றியுள்ள தமிழ் நாவல்கள் வியாசங்கள் நாடகங்களில்

பெரும்பாலான, புதுமைபற்றியும், ஆக்கியோரது மனோசக்தி மொழிப்பயிற்சிக் குறைவுகளினாலும், இலக்கியச் சிறப்பின்றியே அமைந்துள்ளன. இக்குறை காலக்கிரமத்தில் நிரம்பி விடும். இம்மூன்று பகுதிகளிலுள்ள பிறவர்க்கங்களையும், மற்று நான்குவகைக் கிரந்தங்களையும் இலக்கியச் சிறப்புடன் இயற்றித் தமிழ் மொழியில் உரைநடை இலக்கியத்தை அபிவிருத்திசெய்வது, தமிழறிவாளர் கடமையாகும். ஆயின், இவற்றுள்சில, புத்தியை மயக்கி, மனத்தை அடாத வழிகளில் புகுத்தி, தீயதின்னவை உண்டாக்கும். படிப்பவரைக் கெடுக்கும் தன்மையின. இத்தகையவற்றை, முற்றும் விலக்கவேண்டும். இதுகாறும் வெளிவந்துள்ள தமிழ் நாவல் நாடகங்கள் பல இத்தன்மையினவாயிருத்தல் விசனிக்கத்தக்கது.

அறிவு விஷயத்தில் பேரவாக்கொள்வது இழுக்கன்று; மெய்ச்சுதற்குரிய நற்குணமே. ஆங்கிலம் ஆதிய மேலையர் மொழிகளில், உலகெலாம் அளாவிய ஆன்றகருத்துக்களை அடக்கிக் கொண்டு, இனிமை சாதுரியம் காம்பீரியம் தெளிவு முதலிய வனப்புக்கள் வாய்ந்து, அவ்வம் மொழிவாணரது வாழ்க்கைத் துன்புகளுக்கு மாற்றுன்களாயும்; மனத்தை மகிழ்வித்து, மனோசக்தியைக் கிளரச்செய்து, அறிவைப்பெருக்கி, மதுபானம் பொல்லாக்காமம் சூது சோம்பல் ஆகிய தீங்குகளினின்றும் பொறிகளை விலக்கி இயற்கைக் குணத்தைப் பண்படுத்தும் நாகரீகக் கருவிகளாயும் நடைபெறும் நூற்றுக்கணக்கான பலவகை உரைநடை இலக்கியங்களில் சிலவற்றையேனும் பயின்றுள்ள தமிழ்மக்கள், அமிழ்தினும் இனியதாய் ஏனைய அருமை பெருமைகள் வாய்ந்துள்ள தமது தாய்மொழியிலும் அத்தகைய கிரந்தங்கள் மலிந்து விளங்கவேண்டுமென்று அவாவுற்றுத் தம்மால் இயன்றமட்டும் அதற்காக முயலுதல் வியப்பன்று. 'தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவதுடன்' 'தம்மில் தம்மக்கள் அறிவுடைய ராதலை', அவாவிப் பலவழிகளிலும் தமது தாய்மொழி இலக்கிய அபிவிருத்தியை நாடுதல் அறிவுடைய மாந்தரின் இயல்பேயாம்.

ஜன்னல் கண்ணாடி.

Window-glass.

ஸ்ரீமான். P. N அப்புஸ்வாமி ஐயர் எழுதியது.

பல நகரங்களில் 'ஷாப்பு'களிலுள்ள பொருள்கள் வெளியே தெரிதற்கும், வீதியிலெழும் தூசிகள் அவற்றை மாசுப்படுத்தாமலிருத்தற்கும் ஒருங்கே உபயோகமாகும் பெரிய கண்ணாடிகளை ஜன்னல் கண்ணாடிகளென்று விசேஷித்துக் கூறுவதுண்டு.

சமீபத்தில் முடிவுபெற்ற மகாயுத்தம் தொடங்கும் வரை ஜெர்மனி தேசத்திலேயே இவ் வகைக் கண்ணாடிகள் ஏராளமாகச் செய்யப்பட்டுவந்தன.

யுத்தம் ஜெர்மனிதேசத்துக்கு விரோதமாய் முடிந்ததின் பயனாகவும், சண்டையே காரணமாகப் பல தேசங்களுக்கு அவ்வத் தேசங்கள் நாடும் பொருள்களிற் சில வெளிநாடுகளிலிருந்து வரமுடியாது போனமை பற்றியும், ஒவ்வொரு தேசமும் தனக்கு முக்கியமாய் வேண்டிய பொருள்கள் அனைத்தையும் தானே இயற்றும் வழிகளைத் தேட நேர்ந்தது. இதனால் இவ்வகைக் கண்ணாடிகளைப் பல தேசங்கள் ஏராளமாய் செய்ய ஆரம்பித்தன.

இது எளிதான வேலை யென்று நினைக்கக் கூடாது. கண்ணாடிப் பொருளை உருக்கி தகடாய் வார்த்தால் தகட்டுக் கண்ணாடி ஆய்விடுமென்று நினைக்கலாம். உண்மையில் அப்படிச் செய்வது சாத்தியப்படாது.

இதைச் செய்யும் முறை வருமாறு.

உருக்கிய கண்ணாடிப்பொருளை நடுத்துவாரமுள்ள நீண்ட குழாய்களின் நுனியில் எடுத்து மற்றோர் நுனியை வாயில் வைத்துக் கண்ணாடிக்காரன் ஊதுகிறான். உருகிய கண்ணாடியின் நடுவில் ஊதப்பட்ட காற்று உட்சென்று, அதைப் பைபோலாக்குகிறது. இதற்குள் கண்ணாடி சிறிது சூடு குறைந்து கட்டியாக ஆரம்பிக்கிறது. அதை மறுபடியும் அடுப்பில் வைத்ததும் இளகுகிறது. உடனே இன்னும் ஒரு முறை கண்ணாடிக்காரன் காற்றை அதனுள் செலுத்துகிறான். இவ்வாறு மறுபடியும் மறுபடியும் அடுப்பில் வைத்து வைத்து ஊதி ஊதிக் கண்ணாடியையும் சுழற்றிக்கொண்டே வருகிறான். சிறிது நேரத்தில் அது ஒரு நீண்ட பைபோலக் குழாயினின்று தொங்குகிறது. இவ்வாறு வரவரப் பெரிதாகி வரும் கண்ணாடிப் பையைத் தாங்குதற்கென்றே பிரத்தியேகமான பெட்டிகளும் பள்ளங்களும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு ஊதி நீண்ட கண்ணாடிப்பையை நீண்டுகோண லில்லாத பருத்த வெள்ளரிக்காய்க்கு ஒப்பிடலாம். இந்தக் கண்ணாடிப் பையின் இருமுனைகளும் மூடியே இருக்கின்றன.

சற்று சூடு குறைந்ததும் கண்ணாடிக்காரன் இதை ஒரு பெஞ்சின்மீது வைத்து இது அசையாதபடி மரச்சக்கைகளைப் பக்கத்தில் வைத்து இறுக்குகிறான். இரு முனைகளையும் நீக்கிப் பின்பு அவை வெடித்துக் கீறுதபடி உருகிய கண்ணாடியை அம்முனைகளில் தடவுகிறான். இப்பொழுது இவை பெரிய கண்ணாடிக் குழாய்களாகின்றன.

இத்தகைய கண்ணாடிக் குழாய்களில் இரண்டு அல்லது மூன்றை ஒரே வரிசையாய்ப் பெஞ்சிகளின்மீது வைக்கிறான். பின்பு வைர ஊசியால் கண்ணாடிக்குழாய் ஒவ்வொன்றையும்

வெட்டுகிறான். அதாவது ஒவ்வொன்றிலும் நீளப்போக்காக வைர ஊசியால் ஒரு கீறல் கீறுகிறான். இந்தக் கீறலின் இடையில் சிறு மர ஆப்புகளை வைத்துக் குழாயைச் சிறிது துறக்கச் செய்கிறான்.

கீறிய குழாய்களை மறுபடியும் ஒருவகை அடுப்புக்கு எடுத்துப்போய் அங்கே குழாய்களைப் பிளந்து தட்டையாய் விரிக்கிறான். இந்த அடுப்புக்குள் குழாய்களை இயந்திர மூலமாகவே செலுத்துகிறான். அதில் கல்லினாலாய மேற் புரத்தையுடைய ஒரு இருப்புமேஜை இருக்கின்றது. அம் மேஜை அடுப்புக்குள் இங்குமங்கும் அசையுமாறு ஏற்பாடு கள் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு வேலை செய்பவன் அடுப்புக் கதவண்டையில் நிற்கிறான். இயந்திரவண்டியின்மீது வரும் கண்ணாடிக்குழாயை அடுப்பினுள்ளிருக்கும் மேஜையின் மீது உருட்டி விடுகிறான். அவன் பின்பு அடுப்பில் அந்தக் கண்ணாடிக் குழாயைச் சுடவைக்கிறான். அவன் சொல்லுகிற படி அவனுடைய ஆள் ஒருவன் மேஜையை முன்னும் பின்னு மாக வேண்டியபோதெல்லாம் தள்ளிக்கொடுக்கிறான். தண்ணீ ரில் நனைந்த மரத்தலையையும் நீண்ட பிடியையும்உடைய ஒரு ஆயுதம் அவன் கையிலிருக்கும். அந்த ஆயுதத்தால் அவன் சூடேறி சிறிது இளகியிருக்கும் கண்ணாடிக் குழா யைச் சிறிது சிறிதாக விரித்து ஒரே தட்டைக் கண்ணாடித் தகடாக ஆக்கிவிடுகிறான். இதுதான் பிறகு வேண்டியபடி யெல்லாம் துண்டு துண்டாக வெட்டப்பட்டு ஜன்னல் கண் ணாடியாக விற்கப்படுகிறது.

இதுதான் நாம் சாதாரணமாக ஜன்னல்களுக்கும், கதவு களுக்கும், உபயோகிக்கும் தட்டைக்கண்ணாடி.

தில்லைக் கோவிந்தன்.

Thillai Govindan.

(மொழி பெயர்ப்பு.)

பன்னிரண்டாம் அதிகாரத் தொடர்ச்சி.

ஆயினும், தங்களுடைய வாழ்க்கையில் முக்கியமாய் ஆபத்துக்கிடமான பருவத்தில் சகலவித சத்சகவாசங்களினின்றும் நீக்கப்பட்டு, தீவினைகளும் பாபமும் புத்தியைக்கெடுத்து உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும்படி மனோகரமான பல வேஷங்கள் பூண்டு நிறைதரும் அனாரோக்கியமான நகரங்களிலும் பட்டணங்களிலும் சிதறுண்டு தவிக்கும் நூற்றுக் கணக்கான வாலிபர்களைக்காண என்மனம் இரங்கி உருகுகின்றது. அவர்களுக்கு அசாத்தியமான காரியத்தையே செய்யும்படி நான் அவர்களை வேண்டுவதுபோல் தோற்றுகின்றது. ஏனெனில், அவர்களில் ஒருவன் பின்வருமாறு என்னை நோக்கிக் கேட்கலாமன்றோ:—நாங்கள் என்னதான் செய்ய வேண்டுமென்கிறீர்? பாலிய விவாஹ வழக்கமும் இக்கொடிய சூரியவெப்பமும் அதிசீக்கிரமாகவே எங்களுடைய எண்ணங்களை விரும்பத்தகாத வழிகளில் புகுத்துகின்றன. இங்கேயோ, கலாசாலையின் வாசற்படி தாண்டிவிட்டால் எங்களை ஏனென்று கேட்பாரில்லை. எவ்விதக்கட்டுப்பாடுமில்லை; கல்விப்பயிற்சியில்லா மாதரே எனினும் கற்பரசிகளாய் விளங்கும் எங்கள் தாய்மாரின் ஆதீனத்துக்குட்பட்ட எங்கள் வீடுகளோ வெகு தொலையாய்விட, அந்த நற்பழக்கத்தால்

விளையும் சொற்ப நற்பலன்கூட இங்கில்லை; அதுவுமன்றி, எங்கள் மனங்களைச் சூறையாடி எங்கள் புத்திகளை தீவழியில் இழுக்க எத்தனையோவிதமான, சண்கவர் காட்சிகளான துர்விஷயங்கள் நாற்புறமும், எங்களைச் சூழ்ந்துள்ளன; இவை மட்டுமோ, நாங்கள் தம்புமீறித் துள்ளி வெளியேறுவாறு அடக்கவல்ல பொதுஜன அபிப்பிராய மென்ற நிர்ப்பந்தமும் ஒரு சிறிதுமேயில்லை. இவ்விதமாக இங்கே பலமாதங்களாய் பலவருஷங்களாய் நாங்கள் இருந்து எங்களுக்கு ஒன்றும் தெரியாதா என்ன? நாட்டில் சிறந்த தலைவர்களாய், பொதுக் கூட்டங்களிலும் மந்திராலோசனை சபைகளிலும் பிரசங்க மாரி மொழியும் பராக்கிரம வாக்மிகள் என்று பேர்பெற்ற கீர்த்திமான்களாய் விளங்குவோர் பலருடைய அந்தரங்க வாழ்க்கையில் கொஞ்சமேனும் நாங்கள் பறியோமோ? அதோபாரும், உமக்கு தைரியமிருப்பின்; அதோ சடசட வென்று ஓடும் இரட்டைக்குதிரை வண்டிக்குள் பாரும்; உள்ளிருந்து பிரகாசிக்கும் அவ்விரண்டுகண்களும், அவ்வண் டிக்கு யஜமானரான கௌரவப்பிரபுவின் மனையாட்டியின் கண்கள்தாமோ அவை, என்று சொல்லும்; ஏன், ஐயா, நேற் றிரவுதானே, அதே இரண்டு கண்கள் என்னைக்கண்டு களி கூர்ந்து பிரகாசித்தன; அப்பொழுது நான் மனம்பூரித்து ஆனந்தமடைந்து பெருமைகொண்டேன் எனில், ஆச்சரிய மாகுமோ? "அவர்களின் அந்தரங்க வாழ்க்கையெல்லாம் என்ன பொது விஷயமா, அவற்றைப்பற்றி ஏன் பேசவேண் டும்?" என்பீரோ? ஆனால் எங்கள் வாழ்க்கையும் அப்படித் தானே? இஃதிருக்கட்டும். மனைவிமாரைப்பற்றி பேசவந் தீரே, இவ்வித விஷயங்களைக் கவனியாமல், அவர்களிடம் ஏதோ சமயாசமயங்களில் நாம் மனதுவைத்துக் காட்டிவரும் சிற்சில அநுக்கிரகங்களால் திருப்தியும் ஆனந்தமும் அடை

யும்படி, நாம் அவர்களில் பெரும்பாலரை ஒருவிதமாகப் பழக்கி விட்டோமன்றோ? வீண்பேச்சு ஏன் ஐயா? ஒருமுறையாவது மனதறிந்த உண்மையை ஒளியாமல் பகிரங்கமாய் ஒத்துக் கொள்ளும்: அஃதாவது, பெண்மக்களுள் கற்பு எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ அவ்வளவு புருஷர்களுக்குள் அது குறைவே. தன் மனைவி பிறனொருவனை முகமெடுத்துப் பார்த்துப் புன்னகை கொண்டாள் என்றால் அவளை அந்த இடத்திலேயே கொலைபுரியவேண்டுமென்று நினைப்பவன், அதேமனைவியின் கண்ணெதிராகவே தன் சொந்தவீட்டிற்கே தன் வைப்பாட்டியை அழைத்துவந்து, அவளுடன் உல்லாசமாய்க் குதூகலிக்கச் சற்றேனும் தயங்கவே மாட்டான். எங்கள் சங்கதியைச் சொல்லுகிறேன் கேளும்: பொதுவாய் ஸ்திரீ சகவாசத்தை நாடுவது புருஷசுபாவம் என்பது உமக்கு தெரியுமோ? எங்களுக்கு அப்படி எவ்வித ஸ்திரீகளின் சகவாசமிருக்கின்றது? எங்கள் மனைவிகள் தாய்மார், தங்கை தமக்கைகள் முதலியோர், எள்ளளவுமே படிப்பறியாத முட்டாள்கள். மூட நம்பிக்கைகள் பல கொண்டவர்கள். ஆயினும், அவர்களின் சகவாசங்கூட எங்களுக்கு இந்தக் கலாசாலை நாட்களில் கிடைப்பதில்லை. நகரத்திலுள்ள எந்தக் குடித்தனக்காரியும், நன்னடத்தைவாய்ந்த எவ்வித ஸ்திரீயும், எங்கள் முகம் பார்த்து, எங்களுடன் ஒருவார்த்தையேனும் பேசுவதில்லை. உயர்தரக கணிதசாஸ்திர முடிச்சுக்களை அவிழ்ப்பதிலும்; ஜூந்தவீரன் செய்ததென்ன, இவன்பாட்டன் செய்யாததென்ன என்ற சரித்திரசம்பந்தமான விசாரணைகளிலுமே சதாகாலங்கழிக்க முடியாதவர்கள் எங்களில் எத்தனையோ பேரிருக்கிறார்கள். நாங்களும் புருஷர்களே; மனோரம்மியமான சகவாசத்தை விரும்பும் சுபாவம் உடையவர்களே; இப்பொழுதும் எங்களுக்குக் கிடைப்பதிலும் மேலானதும் நன்மையே பயப்பதுமான சகவாசபாத்திரங்களை நீர் ஏற்படுத்தித் தருமளவும், எங்களுக்குச் சுலபமாய்க்கிடைக்கும் இவர்களோடு தான் பழகுவோம். "அதென்னவோ, மெய்தான்; இருந்தாலும், வாலிப மாணாக்கர்கள் இப்படிக் கெடுவதென்றால், அந்தோ, பரிதாபம்! என்னசெய்கிறது? மகாபரிதாபம்!"

(தொடரும்)

தமிழ்ச் செல்வம்.

TAMIL CLASSICS

65 நரசிம்மாவதாரம்.

"நிசைதிறந் திலங்கப் பொங்கி, நன்றுநன் றென்னநக்கு,
விசைபிறந் துருமு[1] வீழ்ந்ததென்ன ஓர் தூணில், வென்றி
இசை பிறந்தனைய கையால் எற்றினன், எற்றலோடும்
திசைதிறந் தண்டம் கீறிச்சிரித்தது செங்கட் சீயம்.[2]

"யார் அடா சிரித்தாய்? சொன்ன அரிகொலோ? அஞ்சிப்புக்க
நீர், அடா, போதாதென்று நெடுந்தறி[3] நேடினையோ?
போர், அடா, புரிதியாயிற் புறப்படு, புறப்படு" என்றான்,
பேர் அடாநின்ற தாளோடுலகெலாம் பெயரப்போவான்.[4]

"நாடி நான தருவன்" என்ற நல்லறிவாளன்[5] நாளும்
தேடி நான்முகனும் காணாச்சேயவன்[6] சிரித்தலோடும்
ஆடினன், அழுதான், பாடி அரற்றினன், சிரத்தில்செங்கை
சூடினன், தொழுதான், ஓடி உலகெலாம் துகைத்தான் துள்ளி"

—சம்பராமாயணம்.

கம்பீரமும் வீரரஸமும் பக்திரஸமும் மிக்க இக்கவிகளில், கம்பர் நரசிம்மாவதாரத்தை வருணித்திருக்கிறார். அரங்கேற்றக் காலத்தில் இச்செய்யுள்களைப் படித்தவுடன், ஸ்ரீரங்கத்து நரசிங்கவிக்ரகம் வாய்திறந்து சிரித்ததென்றும், அதுமுதல் "இளித்தவாய் நரசிங்கன்" என்னும் பெயர்பெற்றதென்றும் கூறுவதுண்டு. அஃது எங்ஙனமாயினும், மகா மூர்க்கனான இரணியன் தமிழனாயிருந்திருப்பின், இவ்வாறே பேசியிருப்பான் என்பது திண்ணம்.

---

1. இடி. 2. சிங்கம். 3. தூண். 4. இரணியன்; 5. பிரகலாதன். 6. தூரத்தவன் (விஷ்ணு).

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(காப்புச்செய்யப்பெற்றது.)

Karanthai Tamil Sangam, Tanjore.

(Registered under Act XXI of 1860)

இரௌத்திரி யாண்டு ஆவணித்திங்கள் ௧௮-ம் நாள், தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டுத் திருவிழாத் திருநாளில், தூத்துக்குடி, திருவாளர் எஸ். ஸோமசுந்தரபாரதியார் அவர்கள், எம். ஏ., பி. எல், தலைவராகக் கூடியிருந்த தமிழர்கள் ஒருமித்துச்செய்த முடிவுகள்.

௧. கோல்கோணாது தங்களைப் புரந்துவரும் மிகுமாட்சி தங்கிய ஐந்தாம்ஜார்ஜ் மன்னர் மன்னருக்கு இப்பெருங்கூட்டத்தார் தங்கள் கோப்பற்றுணர்வைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

* * *

௨. திருவாளர் வாசுதேவ கோபாலசாமி இரகுநாத இராஜாளியார் அவர்கள் உடலொழித்து இறைவனடி சேர்ந்தமை பொதுவில் இத்தமிழ் நாட்டிற்கும், சிறப்பில் இச்சங்கத்திற்கும் பெருங்குறையேயாகும். அன்னார் திருவுருவப்படம் பெரியதொன்று சங்கத்தில் அமைத்துக்கோடல் வேண்டுமென்று யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

* * *

௩. மதுரைத் திருவாளர் ஜே. எம். நல்லசாமிபிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்., இறைவன் திருவடி எய்தியமை குறித்து இப்பெருங்கூட்டத்தார் பெருந் துயரடைகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சரது வேண்டுகோளின் படி பிரசுரிக்கப்பட்டது. ப—ர்.

ச. எவ்வளவும் இனிது வாய்ந்துள்ள தமிழ்மொழியை

* * * *

இனியாவது உயர்தனிச் செம்மொழியாக்கொள்வதுடன், கட்டாய முறையாகவும், கூடியவரை கல்லூரிகளில் கலைபயில் கருவி மொழியாகவும் கொண்டு தங்கள் முதற்கடமையைச் செலுத்தும்படி சென்னைப் பல்கலைக் கழகத்தாரை இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

வி. ஏ. சகராயப்பிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

ஐ. குமரசாமி பிள்ளை அவர்கள், பி. ஏ.

ரு. சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழியின் நலத்தையும், உரிமையையும் பேணுவதற்காகத் திருவாளர் பா. வே. மாணிக்கநாயக்கர் அவர்களை, பி. இ., எம். சி. ஐ.

* * * *

பல்கலைக் கழக உறுப்பினராக்க வேண்டுமென்று அக்கழகத் தலைவர் அவர்களையும் சென்னை ஆட்சியாளரையும் மீண்டும் இப்பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர் பண்டிதர்

எல். உலகநாத பிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

சாமிராவ் அவர்கள், பி. ஏ.

சு. பொருட் பெயர்களையும், சிறப்புப் பெயர்களையும், பிற சொற்களையும், அரசாட்சியாரும், இருப்புப் பாதைக்காரரும், பிறரும் தம் மனம்போனவாறெல்லாம் எழுதிவரல் தமிழியல்புக்கு முற்றிலும் மாறுபடுவதுடன், மொழியின் சிறப்பு நிலைக்கு இடுக்கண் விளைப்பதும், அவ்வச்சொற்களது வரலாறு மறைந்தொழியப் பொருட்டாவது மாயிருத்தலால், இனிமேல் ஒழுங்காக எழுதும் படிக்கும், தாமே ஒழுங்காக எழுதமுடியாவிட்டால் தமிழ்ப் புலவர்களையாவது, தமிழ்ச்

சங்கங்களையாவது கேட்டு மின்றொழுதும் படிக்கும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

எம். எஸ். கல்யாணசுந்தரமையர் அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

என். சீதாராம பிள்ளை அவர்கள்.

எ. இலக்கணமுறை பிறழ்ந்தும், பிறமொழிப் பெயர் களைத் தமிழியல் புக்கேற்பத் திருத்தாமலும் உரைநூல்கள் எழுதுவதும், அந்நூல்களைப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரி களிலும் பாடமாக வைப்பதும், தமிழ்மொழிக்கும், அதனைக் கற்போருக்கும் பேரிடர் விளைவிக்குமாதலால், பணம் ஒன் றையே கருதி அவ்வாறு எழுதாவண்ணம் புலவர்களையும், அத்தகைய நூல்களை ஒப்புக்கொள்ளாதபடிக்கும், ஒப்புக் கொண்டுள்ளவற்றிலுள்ள குறைகளை உடனே மாற்றும்படிக் கும் சென்னைப்பல்கலைக் கழகத்தாரையும், பொதுக்கல்வித் தலைவர் அவர்களையும் இப்பெருங்கூட்டத்தார் கேட்டுக்கொள் ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

அ. சாமிநாத பிள்ளை அவர்கள்.

வழிமொழிந்தார்—திருவாளர்

அ. பாலகிருட்டின பிள்ளை அவர்கள், பி.ஏ.

அ. கல்லூரிகளிலும் உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ்க்கணக்காயர்களாயுள்ளவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் பிறகணக்காயர்களது ஊதியத்தோடு ஒப்ப நோக்குமிடத்து மிகவும் குறைந்ததாயிருக்கின்றது. உழைப்பினும் அறிவினு லும் மற்றைய கணக்காயர்களுக்குத் தமிழ்க்கணக்காயர்கள் ஒரு வகையிலும் தாழ்ந்தவர்களா யில்லாதிருந்தும் அவர் ஊதியம் மட்டும் குறைவாயிருப்பது தமிழ் மொழியையும், அதனைக் கற்போரையும் மதியாமையும், தளரப்பண்ணுவதுமாகையால், இனிமேல் மற்றைய கணக்காயர்களுக்கொப்பத் தமிழ்க் கணக்

காயர்களுக்கும் தக்கபடி ஊதிய முறை ஏற்படுத்தவேண்டு மென்று இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—திருவாளர்

ந. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

வழிமொழிந்தார்—திருவாளர்

வைத்தியலிங்க பிள்ளை அவர்கள்,

௯. உண்மையான தமிழ்த்தொண்டுகள் பல செய்து வரும் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்குத் தீயினால் விளைந்த இடையூற்றுக்காகப் பெரிதும் உளங்கவல்வதோடு, அச்சங்கத்தை நன்னிலையிலுய்ப்பதற்காகத் தத்தமாலியன்ற உதவிசெய்யும் படித் தமிழர், தமிழன்பர் எல்லாரையும் இப்பெருங்கூட்டத் தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௰. தமிழகத்திலுள்ள பெருமடங்களின் தலைவர்கள் தங்கள் பொருட்பெருக்கின் ஒரு சிறு பகுதியேனும் தங்கள் கடமையாகிய தமிழ் மொழி வளர்ச்சியில் செலவிடுவார்க ளாயின் பெரும் பயன் விளையுமென்று அன்னோர்களைப் பன் முறை கேட்டும் அவர்கள் வாளா விருத்தல் மிகவும் கவலத் தக்கதாயிருக்கிறது. இனியாவது அவர்கள் தங்கள் கடமையை யோர்ந்து தமிழ் மொழி மேம்பாட்டுக்கு ஆவன செய்யும்படி அவர்களை இப் பெருங்கூட்டத்தார் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

௰௧. பிறமொழி நூல்களையும், கலைகளையும் தமிழ் மொழியிலாக்கிக் கொள்ளுவதற்காக வேண்டிய சொற்களைப் பொறுக்கவும், ஆக்கவும் தக்க புலமை வாய்ந்த தமிழறிஞர்கள் கூடிய ஒரு கழகம் கூட்டும் படிக்குத் தமிழ்ச் சங்கங்களையும், தமிழறிஞர்களையும் இப்பெருங் கூட்டத்தார் கேட்டுக்கொள் ளுகிறார்கள்.

முன்மொழிந்தார்—தலைவர்.

ப. கல்யாணசுந்தரம், அமைச்சர்.

அறிவுநூல் மொழிகள்.

Scientific Terms.

மனோன்மணீயம் என்னும் நாடகமியற்றிய காலஞ் சென்ற பிரோபஸர் பி. சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. எழுதிய நூற்றொகை விளக்கம் என்னும் நூலின் அனுபந்தத்தினின்று கீழே காணும் மொழிகளை எடுத்திருக்கிறது,

Abstract	கேவலம்
Art	கலை
„ Fine	நற்கலை
„ Ordinary	பொதுக்கலை
„ Psychical	யோககலை
„ Rules of	கலை நூல்
Axiom	தனித்தாபிதம்
Concrete	அகேவலம்
Definition	இலக்கணங் கூறல்.
End aimed at	பலோத்தேசம்
[Exception	புறனடை]
Exaggeration	அதிசயோக்தி
Extension	அளவு; விததி
General, The	பொதுமை
Individual, The	தனிமை
Method	ஒழுங்கு
Number	எண்; எண்ணம்
Order	ஒழுங்கு

Particular, The	தனிமை
Postulate	ஒப்புவெளிப்படை
Practice	பயிற்சி
Procedure, Mode of	அநுஷ்டான மார்க்கம்
[Scientifically	நூலொழுங்கின்படி]
Simple—Easy of comprehension	வெளிப்படை
,, —Easy of Demonstration	இலகுதாபிதம்
System	ஒழுங்கு
Technical Term	சங்கேதமொழி
Truth	உண்மை
,, Approximate	ஏகதேசவாக்கியம்
Unifornity of nature	சுபாவ நியமம்
Verification	[மெய்ப்பித்தல்] உண்மைப் [படுத்தல்

நமது நேசனைப் படிக்கும் நண்பர்கள் இம்மொழிகளை நன்கு ஆராய்ந்து அவற்றுள் யாவற்றையாயினும் தாம் ஒப்ப முடியாதென நினைப்பின் அவற்றுக்கு ஈடான மொழிகளை எனக்கு எழுதி அனுப்பும்படி தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.